இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 97 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 01 – திங்கள்கிழமை 17 நவம்பர் 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 97: Thiruvalluvar Year - 2056 - Karthigai 01 - Monday 17 November 2025 - Chennai 12 Pages ₹ 5.00

## வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத் திருவிழாவினையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் – சென்னை

# முற்போக்குப் புத்தகக் காட்சி 2025 !



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2025) சென்னை, வள்ளுவர்கோட்டத்தில் நடைபெறும் “தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார் !

**சென்னை, நவ. 17 -**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் நடைபெற்ற அறிவுத் திருவிழாவையொட்டி முற்போக்கு புத்தகக் காட்சி 2025 நடைபெற்று வந்தது. இதன் இறுதி நாளான நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முற்போக்கு புத்தகக் காட்சியை பார்வையிட்டார். அதுபோது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உடனிருந்தார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா நிறைவையொட்டி இளைஞர் அணியின் சார்பில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில், ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல் வெளியீடு, இருவண்ணக் கொடிக்கு வயது 75 இரண்டு நாள் கருத்தரங்கம், முற்போக்கு புத்தகக் காட்சியுடன் நவம்பர் எட்டாம் தேதி அறிவுத் திருவிழா தொடங்கியது.

இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தி.மு.க.வின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தி.மு.க. இளைஞர் அணி ‘தி.மு.க. 75 அறிவுத்திருவிழா’ என்னும் நிகழ்ச்சியை முன்னெடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலை வெளியிட்டு, ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தையும் ‘முற்போக்கு புத்தகக்காட்சியையும் தொடங்கி வைத்தார்.

75 ஆண்டுக்கால வரலாறு கொண்ட தி.மு.க. அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுத் தளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து எழுத்தாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக மற்றும் அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், தேசிய கட்சி தலைவர்கள், கழகத் தலைவர் உள்ளிட்ட தி.மு.க. தலைமைக்கழக நிர்வாகிகள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய, 1120 பக்கங்கள் கொண்ட ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்னும் புத்தகம், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் உருவாகியுள்ளது. இந்த ஆவணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

இதனை தி.மு.க. பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் பெற்றுக்கொண்டார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள், கழக இளைஞர் அணிச்செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் தி.மு.க. இளைஞர் அணி துணைச்செயலாளர்கள் முன்னிலை வகித்தனர்.

### அறிவுத் திருவிழாவின் இறுதி நாள்!

இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் பெரியாரிய அம்பேத்கரிய மார்க்சிய பதிப்பாளர்கள் மற்றும் நூல் விற்பனையாளர்களை மட்டும் கொண்டு நடைபெறும் புதுமையான இப்புத்தக் காட்சி அரசியல் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு, புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு நூல்களை வாங்கிச் சென்றுள்ளனர்.

இப்புதுமையான முயற்சி தொடர வேண்டுமென்று நூற்றுக் கணக்கானோர் தங்கள் சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட்டுள்ளனர்.

முற்போக்கு புத்தகக் காட்சியை ஒட்டி, மாலை நேரங்களில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளையும், கருத்தாளர்கள் உரையையும் காண பொதுமக்கள் தன்னெழுச்சியாக பெரும் ஆர்வத்துடன் கூடினர்.

10% தள்ளுபடி விலையில் முற்போக்கு நூல்களை தேடி அலையாமல் ஒரே இடத்தில் வாங்கும் வாய்ப்பும், கலைநிகழ்ச்சிகளும் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அந்த வகையில் கடந்த எட்டு நாட்களாக கோலாகலமாக நடைபெற்று வந்த சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி 2025 நேற்றுடன் நிறைவு பெற்றது.

இந்நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் நேற்று முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டனர்.

அதுபோது சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உடனிருந்தனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின்

## மோசடிகளை தோலுரிக்கும் ஊடகவியலாளர்களைப் பாராட்டுகிறேன்!

### தேசிய பத்திரிகை நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, நவ. 17 -**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல்களையும், மோசடிகளையும் தோலுரிக்கும் ஊடகவியலாளர்களைப் பாராட்டுகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசிய பத்திரிகை நாளையொட்டி விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.**

தேசிய பத்திரிகை நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**எந்த ஒரு மக்களாட்சியிலும், தன்னாட்சி அமைப்புகள் அதிகாரத்தில் உள்ளவர்களால் கைப்பற்றப்பட்டாலும், ஊடகம்தான் மக்களாட்சியை உயிர்ப்போடு வைத்திருக்கும் ஆற்றலாக விளங்க வேண்டும்.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சாதிகாரத்துக்கு அடிபணியாமல் துணிவுடன் அவர்களது தோல்விகளையும், ஊழல்களையும், மோசடிகளையும் தோலுரிக்கும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் தேசிய பத்திரிகையாளர் நாளில் பாராட்டுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

## ஒசூரில் விமான நிலையம்!

### ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கடிதம்!

*சென்னை, நவ. 17 -*

*ஒசூரில் விமான நிலைய தளம் அமைக்க ஒப்புதல் வழங்கக் கோரி ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துள்ளது.*

*கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் முதலீடுகளை ஈர்க்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.*

*இதற்காக ஒசூரில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விமான நிலையம் அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் அறிவிப்பு வெளியிட்டார்.*

*அதைத்தொடர்ந்து, ஒசூர் அருகே சூளகிரி வட்டத்தில் உள்ள பேரிகை மற்றும் பாகலூர் ஆகிய பகுதிகளுக்குஇடையே விமான நிலையம் அமைக்க தமிழ்நாடு அரசு இடம் தேர்வு செய்தது.*

*இதையடுத்து, அப்பகுதியில் விமான நிலையத் தளம் அமைக்க ஒப்புதல் வழங்கக் கோரி ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துள்ளது.*

*ஒசூர் சர்வதேச விமான நிலையத்தை, 3 கோடி பயணிகளை கையாளும் வகையில் அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.*

## “தி.மு.க. 75 அறிவுத் திருவிழா” - முற்போக்கு புத்தகக் காட்சி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு – புத்தகங்கள் வாங்கினார்!

**சென்னை, நவ.17-**

**“தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு, புத்தகங்களை வாங்கினார்.**

**அதன் விவரம் வருமாறு:-**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் “தி.மு.க. 75 அறிவுத் திருவிழா”வில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டு, 63 புத்தகங்களை வாங்கினார்.

முற்போக்கு புத்தகக் காட்சிக்கு வருகைபுரிந்த முதலமைச்சர் அவர்களை கழக இளைஞர் அணியினர், கழக நிருவாகிகள், வாசகர்கள், ஆசிரியர்கள், பதிப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் இன்முகத்தோடு வரவேற்றனர்.

கழக இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற திமுக 75 முப்பெரும் அறிவுத் திருவிழா 8.11.2025 முதல் 16.11.2025 வரை நடைபெற்று வருகிறது.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.11.2025 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், முற்போக்கு புத்தகக் காட்சியினைத் திறந்து வைத்தார்.

மேலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள அரங்குகள், திமுக 75 வரலாற்றுக் கண்காட்சி மற்றும் “தன்மானம் காக்கும் கழகம்” மேடை நாடகத்தினை பார்வையிட்டார். பின்னர், இருவண்ணக் கொடிக்கு வயது 75 கருத்தரங்கத்தினை தொடங்கி வைத்து, “காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு” நூலினையும் வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து, நேற்று (16.11.2025) கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், முற்போக்கு புத்தகக் காட்சியை சுமார் இரண்டரை மணி நேரம் பார்வையிட்டார். அப்போது, அங்கிருந்த மாணவர்கள், புத்தக பதிப்பாளர்கள், எழுத்தாளர்களுடன் கலந்துரையாடினார்.

முதலமைச்சர் அவர்கள், அனைத்து புத்தக அரங்குகளுக்கும் நேரடியாக சென்று 63 புத்தகங்களை தேர்வு செய்து வாங்கினார். அதில், திராவிட இயக்க புத்தகங்கள், வரலாறு புத்தகங்கள், இலக்கிய புத்தகங்கள், சுயசரிதை புத்தகங்கள் போன்ற பல்வேறு தலைப்புகளில் புத்தகங்களை படித்துப்பார்த்து வாங்கினார்.

திமுக 75 அறிவுத் திருவிழாவில், அமைக்கப்பட்டுள்ள புத்தகக் காட்சியில் 56 அரங்குகளில் பல்வேறு புத்தகப் பதிப்பாளர்களின் புத்தகங்களை விற்பனைக்கு வைத்திருந்தார்கள். இங்கு, நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், இளைஞர்கள் பார்வையிட்டு, பல்வேறு புத்தகங்களை வாங்கி பயனடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாபெரும் அறிவுத் திருவிழாவினை வெற்றிகரமாக நடத்திவருவதற்கு கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் மற்றும் கழக நிருவாகிகள் உடனிருந்தனர்.